# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.03/2024 நாள் : 06.01.2024**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் நெம்மேலியில் ரூ.1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் அமைக்கப்பட்டுவரும் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் செயல்பாடுகள் விரைவில் தொடங்கி வைக்கப்பட உள்ளது.**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தகவல்**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (06.01.2024) சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் நெம்மேலியில் அமைக்கப்பட்டுவரும் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் நிறைவு கட்டப் பணிகளை ஆய்வு செய்தார்.

**பின்னர், மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. பருவமழை பொய்க்கும் காலங்களில் நகரின் நீண்ட கால குடிநீர்த் தேவை மற்றும் மக்களின் அன்றாட குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களை அமைத்துள்ளது.

அதனடிப்படையில், முதன்முதலாக தமிழ்நாட்டில் மீஞ்சூர் காட்டுப்பள்ளியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010-ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையில்,

23.02.2010 அன்று நெம்மேலியில் அன்றைய துணை முதலமைச்சரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.805 கோடியே 8 லட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட இரண்டாவது கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இப்பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன் பெறும் வகையில் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, நெம்மேலியில் ரூ.1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டு, தற்போது அனைத்து பணிகளும் நிறைவு கட்டத்தை எட்டியுள்ளது. கடல்சார் பணிகள், இயந்திரவியல் மற்றும் மின்சாரம் கருவிகள் நிறுவும் பணிகள் அனைத்தும் நிறைவு செய்யப்படும் தருவாயில் உள்ளது. மேலும், கடல்நீரை நிலையத்திற்கு உள் கொணரும் குழாய் மற்றும் நிராகரிக்கப்பட்ட உவர்நீரை கடலுக்கு வெளியேற்றும் குழாய் (Offshore works; Intake and Outfall Pipeline works), கடல்நீரை உள் வாங்கும் ஆழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (Seawater Intake Sump) காற்றழுத்தம் மூலம் எண்ணெய் மற்றும் கசடுகளை அகற்றும் தொட்டி (Dissolved Air Flotation), வடிகட்டப்பட்ட கடல் நீர்த்தேக்கத் தொட்டி (Clarified Water Tank), வடிகட்டப்பட்ட கடல்நீர் உந்து நிலையம் (Clarified Water Pumping Station) என இந்நிலையத்தில் மொத்தம் உள்ள 23 அலகுகளில் அனைத்து பணிகளும் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

இந்நிலையத்திலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை, பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு, 48.10 கி.மீ நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் சோழிங்கநல்லூரில் இடைநிலை நீரேற்று நிலையம் அமைப்பதற்கான அனைத்து கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர், தென் சென்னை பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், புனிததோமையார் மலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், மடிப்பாக்கம். தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம் மற்றும் பழைய மகாபலிபுரம் சாலை(OMR)ல் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனப் பகுதிகளில் உள்ள 9 இலட்சம் மக்கள் பயனடைவார்கள். இந்நிலையத்தின் இயக்குதலுக்கான ஒப்புதல் (Consent to operate) தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் அனைத்து கட்டுமானப் பணிகளும் நிறைவு செய்யப்படும் தருவாயில் உள்ளது. சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டு தொடர்ந்து கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் நிலையத்தின் செயல்பாடுகள் விரைவில் தொடங்கி வைக்கப்படும் என மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., பொறியியல் இயக்குநர் திரு.மி.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமைப் பொறியாளர் திரு.ஆர்.கந்தசாமி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater